# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.2

**Deposition of witness for }**

**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 9/2017**

| | | | |
|---|---|---|---|
| **Name** | அபிராமி | **D/o.** | கிருஷ்ணமூர்த்தி |
| **Village** | சத்திரப்பட்டி | **Taluk** | உரத்தநாடு |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.2 |
| **Date** | 08-11-2022 | **Age** | 21/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 08.11.2022.**

**முதல் விசாரணை:**

நான் மேலேக் கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது அப்பா பெயர் கிருஷ்ணமூர்த்தி. எனது அம்மா தான் 3வது எதிரி ஆவார். எனக்கு அன்புக்கரசி என்ற மூத்த சகோதரியும், பவித்ரா என்ற இளைய சகோதரியும் உள்ளனர். சம்பவ சமயத்தில் நான் புதுக்கோட்டையில் உள்ள ராணி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். எனது மூத்த சகோதரி அன்புக்கரசி அதேப் பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வந்தார். எனது இளைய சகோதரி புதுக்கோட்டை இருதய மேல்நிலைப்பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வந்தார். எனது அப்பா நமணசமுத்திரத்தில் மளிகைக் கடையும் டீக்கடையும் வைத்து தொழில் செய்து வந்தார். எனது தாயார் எனது தந்தைக்கு உதவியாக கடையில் இருப்பார். எனது தந்தையும் தாயாரும் சந்தோசமாக இருந்தார்கள். அவர்களுக்குள் எப்போதாவது சண்டை வரும். 1வது எதிரி வீரசோழன் என்பவர்

கடைக்கு சிலிண்டர் போட வருவார். அடிக்கடி அவர் சிலிண்டா போட அவர் வருவதால் 3வது எதிரியான எனது அம்மாவுடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டது. இது எனது தகப்பனாருக்கு தெரிந்ததால் அடிக்கடி எனது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை ஏற்பட்டது. 25.02.2015ல் இரவு 11.30 மணியளவில் நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது எனது அப்பா அபி, அம்மு, பவித்ரா என்னை யாரோ கொல்ல வருகிறார்கள் என கத்தினார். நான் எழுந்து பார்க்கும் போது நானும் எனது தங்கை பவித்ரா மட்டும் வீட்டில் இருந்தோம். நாங்கள் கத்தி வீட்டு கதவை திறக்கச் சொன்னோம். அந்த சமயம் நாங்கள் வீட்டினுள் இருந்தோம். 1, 2 எதிரிகள் சத்தம் போடாதீர்கள் என்றும் சத்தம் போட்டால் உங்கள் அப்பாவை போல எங்களையும் கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள். எனது தந்தையின் முகத்தில் தலையணையை வைத்து வீரசோழன் அழுத்தினார். ராஜா என்பவர் காலை பிடித்துக் கொண்டார். அப்பா தள்ளிவிட்டுக் கொண்டு எழும்பொழுது வீரசோழன் ராடால் எனது அப்பாவின் தலையில் அடித்தார். அதன் பின் என் அப்பாவிடமிருந்து சத்தம் இல்லை. அப்பா இறந்துவிட்டார். அதன் பின் என் அம்மாவிற்கு வீரசோழன் போன் செய்து கதவை திறங்க கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார் எனக் கூறினார். எனது அம்மா கதவை திறந்தார். என் அம்மாவுடன் என் அக்கா இருந்தார். எனது அம்மா நாங்கள் யாரும் சத்தம் போட்டால் அப்பாவை போல் அடித்துக் கொன்றுவிடுவோம் என மிரட்டினார். வீட்டிலிருந்த டேபிளில் எனது அப்பாவை வைத்து ரத்தம் படிந்திருந்த அவரது ஆடைகளை மாற்றினார்கள். எதிரிகள் மூவரும் சகோதரிகளான எங்கள் மூவரையும் மொட்டை மாடியில் அடைத்துவிட்டு வெளியில் யாரும் சொல்லக்கூடாது என்றும் அவ்வாறு சொன்னால் உங்கள் அப்பாவை போல் எங்களையும் கொன்றுவிட்டு அப்பா இறந்த துக்கத்தில் நாங்களும் இறந்துவிட்டதாக வெளியில் சொல்லிவிடுவோம் என எதிரிகள் மூவரும் எங்களை மிரட்டினார்கள்.

என்னிடம் காட்டப்படும் இரும்பு ராடால் தான் வீரசோழன் என் அப்பாவின் தலையில் அடித்தார். அந்த ராடு **அ.த.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் தலையணையால் வீரசோழன் என் அப்பாவின் முகத்தில் வைத்து அழுத்தினார். அந்த தலையணை **அ.த.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வேட்டி தான் என் அப்பா சம்பவ சமயத்தில் உடுத்தியிருந்தது. அந்த வேட்டி **அ.த.சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சட்டை தான் என் அப்பா சம்பவ சமயத்தில் போட்டிருந்தது. அந்த சட்டை **அ.த.சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் துப்பட்டா சம்பவ சமயத்தில் என் தந்தை அணிந்திருந்தது. அந்த துப்பட்டா **அ.த.சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் மர பெஞ்சில் தான் என் தகப்பனாரை வைத்து தூக்கிச் சொன்றார்கள். அந்த மர பெஞ்சு **அ.த.சா.பொ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது அப்பாவை எதிரிகள் மூவரும் சான்று பொருள் 6ல் வைத்து தூக்கிச் சென்றார்கள். எங்கு தூக்கிச் சென்றார்கள் என தெரியாது. அப்போது என் அப்பா இறந்துவிட்டிருந்தார். அரை மணி நேரம் கழித்து மூவரும் திரும்பி வந்தார்கள். அதன் பின்னர் இரத்தம் படிந்திருந்த ஆடைகளை ஒரு சாக்கு பையில் கட்டினார்கள். வீரசோழன் வெள்ளைக் கலரில் பவுடரும் எலுமிச்சம்பழமும் கொண்டு வந்து தண்ணீரில் கலந்து வீட்டில் ரத்தம் படிந்திருந்த இடத்தை கழுவினார்கள். பின்னர் எதிரிகள் மூவரும் எங்களை விஷயத்தை வெளியில் சொல்லக்கூடாது என மிரட்டினார்கள். அதிகாலை 03.00 மணியளவில் சாக்குப் பையை எடுத்துக் கொண்டு 1, 2 எதிரிகள் வெளியில் சென்றுவிட்டார்கள். நாங்கள் அனைவரும் தூங்காமல் விழித்திருந்தோம். காலை 06.00 மணியாகிவிட்டது. எனது தாயார் 3வது எதிரி எங்களை பார்த்து நீங்கள் எப்பொழுதும் போல் பள்ளிக்கு கிளம்பி செல்லுங்கள் என கூறினார். நாங்கள்

மூவரும் கிளம்பினோம். ஆனால் எனது அக்காவும் எனது தங்கை மட்டும் தான் பள்ளிக்கு சென்றார்கள். நான் வீட்டிலேயே இருந்துவிட்டேன். கடைக்கு வந்தவர்களிடம் எனது தாயார் இரவு முதல் என் அப்பாவை காணவில்லை என கூறியதால் வந்தவர்கள் அம்மாவுக்கு துணையாக வீட்டில் இரு என சொல்லவிட்டதால் நான் பள்ளிக்கு செல்லவில்லை. காலை 08.30 மணியளவில் கடைக்கு டீ குடிக்க வந்தவர்கள் ரயில் பாதையில் யாரோ இறந்துக் கிடக்கிறார்கள் என சொன்னார்கள். கடைக்கு டீ குடிக்க வந்தவர்கள் எனது அம்மாவை ரயில் பாதைக்கு அழைத்துச் சென்றார்கள். எனது தாயார் எனது தந்தையார் ரயில் பாதையில் ரயில் ஏறி இறந்துவிட்டதாக பலரிடம் கூறினார். என்னையும் எனது தந்தை இறந்து கிடந்த அந்த ரயில் பாதைக்கு அங்கிருந்தவர்கள் அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்தவர்கள் ரயிலில் அடிபட்டு என் தந்தை இறந்துவிட்டதாக சத்திரப்பட்டியில் உள்ள எனது தாத்தா பாட்டி வீட்டிற்கு தகவல் சொன்னார்கள். எனது தாயார் யாரிடமும் விடாமல் அன்புக்கரசி, என்னை, பவித்ராவை வைத்திருந்தார். ஊரிலிருந்து வந்த தாத்தா, பாட்டியிடமும் எங்களை என் தாயார் பேச விடவில்லை. காரைக்குடி காவல் நிலையத்திலிருந்து போலீசார் எனது தகப்பனார் எப்படி இறந்தார்கள் என விசாரித்தார்கள். எனது தாயார் எங்கள் யாரையும் பேச விடாமல் அவர் மட்டும் பேசினார். பின்னீடு எனது தந்தையின் உடலை சடலக் கூறாய்வு செய்வதற்காக திருமயம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு எனது தந்தையின் உடலை எனது தாத்தாவும் பாட்டியும் பிறந்த ஊரில் தான் அடக்கம் செய்ய வேண்டுமென சத்திரப்பட்டிக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். எனது தாயார் எங்களை சத்திரப்பட்டிக்கு செல்ல விடவில்லை. அதன் பின்னீடு நாங்கள் எங்கள் வீடு நமனசமுத்திரத்தில் தான் இருந்தோம். அதன் பிறகும் 1வது எதிரி அடிக்கடி

எங்கள் வீட்டிற்கு எப்போதும் வந்து போவது போல் வந்து போனார். எனது அக்கா அதை எதிர்த்துக் கேட்டதற்கு உன்னையும் அப்பாவைப் போல கொன்றுவிடுவோம் என எனது தாயார் மிரட்டினார். இதனால் பயந்துக் கொண்டு எனது அக்கா தாத்தா வீடான சத்திரப்பட்டிக்கு எனது அப்பா இறந்ததிலிருந்து 3 மாதம் கழித்து சத்திரப்பட்டி சென்றுவிட்டது. அக்கா சென்ற இரண்டு நாட்கள் கழித்து நானும் சத்திரப்பட்டிக்கு சென்றுவிட்டேன். நானும் எனது அக்காவும் அப்பாவை அம்மா ஆட்கள் வைத்து கொன்றுவிட்டதாக தாத்தா, பாட்டியிடம் சொன்னோம். அதன் பின்னீடு தாத்தாவும் பாட்டியும் எங்களை திருச்சிக்கு அழைத்து சென்றார்கள். அங்கு தனது மகளை கொன்றுவிட்டதாக தாத்தாவும் பாட்டியும் மனு கொடுத்தார்கள். இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரங்களை கூறினேன். அதன் பின்னீடு காரைக்குடிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கும் என்ன நடந்தது என என்னை விசாரித்தார்கள் நான் நடந்த விபரத்தை கூறினேன். பின் ஒரு மாதம் கழித்து திருப்பத்தூர் கோர்ட்டில் நீதிபதியிடம் நடந்த விபரம் குறித்து இரகசிய வாக்குமூலம் கொடுத்தேன். என்னைப் போலவே எனது பாட்டி சிங்கம்மாளும் எனது தங்கை பவித்ராவும் நீதிபதியிடம் ரகசிய வாக்குமூலம் கொடுத்தார்கள். என்னை விசாரித்தவர்களிடம் நான் நடந்த விபரங்களை கூறினேன்.

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நமனசமுத்திரத்தில் நாங்கள் குடியிருந்த வீடு புதுக்கோட்டை - மதுரை மெயில் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். அதற்கு நேர் எதிர்த்தாற்போல் நமனசமுத்திரம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு அருகாமையிலேயே உதவி ஆய்வாளர் மற்றும் காவலர் குடியிருப்பு உள்ளது என்றால்

சரிதான். எங்கள்  தகப்பனார் இறந்து போன 26.02.2015 அன்று காரைக்குடி ரயில்வே போலீஸ் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். என்ன நடந்தது எனக் கேட்டார்கள். என் அம்மா சொல்லவிடவில்லை. ரயிலில் அடிபட்ட இடத்திலும் விசாரித்தார்கள். 1வது எதிரி வீரசோழன் என்பவர் கடைக்கு சிலிண்டர் போட வருவார். அடிக்கடி அவர் சிலிண்டா போட அவர் வருவதால் 3வது எதிரியான எனது அம்மாவுடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டது. இது எனது தகப்பனாருக்கு தெரிந்ததால் அடிக்கடி எனது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை ஏற்பட்டது. 25.02.2015ல் இரவு 11.30 மணியளவில் நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது எனது அப்பா அபி, அம்மு, பவித்ரா என்னை யாரோ கொல்ல வருகிறார்கள் என கத்தினார். நான் எழுந்து பார்க்கும் போது நானும் எனது தங்கை பவித்ரா மட்டும் வீட்டில் இருந்தோம். நாங்கள் கத்தி வீட்டு கதவை திறக்கச் சொன்னோம். அந்த சமயம் நாங்கள் வீட்டினுள் இருந்தோம். 1, 2 எதிரிகள் சத்தம் போடாதீர்கள் என்றும் சத்தம் போட்டால் உங்கள் அப்பாவை போல எங்களையும் கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள். எனது தந்தையின் முகத்தில் தலையணையை வைத்து வீரசோழன் அழுத்தினார். ராஜா என்பவர் காலை பிடித்துக் கொண்டார். அப்பா தள்ளிவிட்டுக் கொண்டு எழும்பொழுது வீரசோழன் ராடால் எனது அப்பாவின் தலையில் அடித்தார். அதன் பின் என் அப்பாவிடமிருந்து சத்தம் இல்லை. அப்பா இறந்துவிட்டார். அதன் பின் என் அம்மாவிற்கு வீரசோழன் போன் செய்து கதவை திறங்க கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார் எனக் கூறினார். எனது அம்மா கதவை திறந்தார். என் அம்மாவுடன் என் அக்கா இருந்தார். எனது அம்மா நாங்கள்  யாரும் சத்தம் போட்டால் அப்பாவை போல் அடித்துக் கொன்றுவிடுவோம் என மிரட்டினார். வீட்டிலிருந்த டேபிளில் எனது அப்பாவை வைத்து ரத்தம் படிந்திருந்த அவரது ஆடைகளை மாற்றினார்கள். எதிரிகள் மூவரும்

சகோதரிகளான எங்கள் மூவரையும் மொட்டை மாடியில் அடைத்துவிட்டு வெளியில் யாரும் சொல்லக்கூடாது என்றும் அவ்வாறு சொன்னால் உங்கள் அப்பாவை போல் எங்களையும் கொன்றுவிட்டு அப்பா இறந்த துக்கத்தில் நாங்களும் இறந்துவிட்டதாக வெளியில் சொல்லிவிடுவோம் என எதிரிகள் மூவரும் எங்களை மிரட்டினார்கள். என்னிடம் காட்டப்படும் இரும்பு ராடால் தான் வீரசோழன் என் அப்பாவின் தலையில் அடித்தார். அந்த ராடு **அ.த.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் தலையணையால் வீரசோழன் என் அப்பாவின் முகத்தில் வைத்து அழுத்தினார். அந்த தலையணை **அ.த.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வேட்டி தான் என் அப்பா சம்பவ சமயத்தில் உடுத்தியிருந்தது. அந்த வேட்டி **அ.த.சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சட்டை தான் என் அப்பா சம்பவ சமயத்தில் போட்டிருந்தது. அந்த சட்டை **அ.த.சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் துப்பட்டா சம்பவ சமயத்தில் என் தந்தை அணிந்திருந்தது. அந்த துப்பட்டா **அ.த.சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் மர பெஞ்சில் தான் என் தகப்பனாரை வைத்து தூக்கிச் சொன்றார்கள். அந்த மர பெஞ்சு **அ.த.சா.பொ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது அப்பாவை எதிரிகள் மூவரும் சான்று பொருள் 6ல் வைத்து தூக்கிச் சென்றார்கள். எங்கு தூக்கிச் சென்றார்கள் என தெரியாது. அப்போது என் அப்பா இறந்துவிட்டிருந்தார். அரை மணி நேரம் கழித்து மூவரும் திரும்பி வந்தார்கள். அதன் பின்னர் இரத்தம் படிந்திருந்த ஆடைகளை ஒரு சாக்கு பையில் கட்டினார்கள். வீரசோழன் வெள்ளைக் கலரில் பவுடரும் எலுமிச்சம்பழமும் கொண்டு வந்து தண்ணீரில் கலந்து வீட்டில் ரத்தம் படிந்திருந்த இடத்தை கழுவினார்கள். பின்னர் எதிரிகள் மூவரும் எங்களை விஷயத்தை வெளியில் சொல்லக்கூடாது என மிரட்டினார்கள். அதிகாலை 03.00

மணியளவில் சாக்குப் பையை எடுத்துக் கொண்டு 1, 2 எதிரிகள் வெளியில் சென்றுவிட்டார்கள். நாங்கள் அனைவரும் தூங்காமல் விழித்திருந்தோம். காலை 06.00 மணியாகிவிட்டது. எனது தாயார் 3வது எதிரி எங்களை பார்த்து நீங்கள் எப்பொழுதும் போல் பள்ளிக்கு கிளம்பி செல்லுங்கள் என கூறினார். நாங்கள் மூவரும் கிளம்பினோம். ஆனால் எனது அக்காவும் எனது தங்கை மட்டும் தான் பள்ளிக்கு சென்றார்கள். நான் வீட்டிலேயே இருந்துவிட்டேன். கடைக்கு வந்தவர்களிடம் எனது தாயார் இரவு முதல் என் அப்பாவை காணவில்லை என கூறியதால் வந்தவர்கள் அம்மாவுக்கு துணையாக வீட்டில் இரு என சொல்லிவிட்டதால் நான் பள்ளிக்கு செல்லவில்லை. காலை 08.30 மணியளவில் கடைக்கு டீ குடிக்க வந்தவர்கள் ரயில் பாதையில் யாரோ இறந்துக் கிடக்கிறார்கள் என சொன்னார்கள். கடைக்கு டீ குடிக்க வந்தவர்கள் எனது அம்மாவை ரயில் பாதைக்கு அழைத்துச் சென்றார்கள். எனது தாயார் எனது தந்தையார் ரயில் பாதையில் ரயில் ஏறி இறந்துவிட்டதாக பலரிடம் கூறினார். என்னையும் எனது தந்தை இறந்து கிடந்த அந்த ரயில் பாதைக்கு அங்கிருந்தவர்கள் அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்தவர்கள் ரயிலில் அடிபட்டு என் தந்தை இறந்துவிட்டதாக சத்திரப்பட்டியில் உள்ள எனது தாத்தா பாட்டி வீட்டிற்கு தகவல் சொன்னார்கள். எனது தாயார் யாரிடமும் விடாமல் அன்புக்கரசி, என்னை, பவித்ராவை வைத்திருந்தார். ஊரிலிருந்து வந்த தாத்தா, பாட்டியிடமும் எங்களை என் தாயார் பேச விடவில்லை. காரைக்குடி காவல் நிலையத்திலிருந்து போலீசார் எனது தகப்பனார் எப்படி இறந்தார்கள் என விசாரித்தார்கள். எனது தாயார் எங்கள் யாரையும் பேச விடாமல் அவர் மட்டும் பேசினார். பின்னீடு எனது தந்தையின் உடலை சடலக் கூறாய்வு செய்வதற்காக திருமயம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு எனது தந்தையின்

உடலை எனது தாத்தாவும் பாட்டியும் பிறந்த ஊரில் தான் அடக்கம் செய்ய வேண்டுமென சத்திரப்பட்டிக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். எனது தாயார் எங்களை சத்திரப்பட்டிக்கு செல்லவிடவில்லை. அதன் பின்னீடு நாங்கள் எங்கள் வீடு நமணசமுத்திரத்தில் தான் இருந்தோம். அதன் பிறகும் 1வது எதிரி அடிக்கடி எங்கள் வீட்டிற்கு எப்போதும் வந்து போவது போல் வந்து போனார். எனது அக்கா அதை எதிர்த்துக் கேட்டதற்கு உன்னையும் அப்பாவைப் போல கொன்றுவிடுவோம் என எனது தாயார் மிரட்டினார். இதனால் பயந்துக் கொண்டு எனது அக்கா தாத்தா வீடான சத்திரப்பட்டிக்கு எனது அப்பா இறந்ததிலிருந்து 3 மாதம் கழித்து சத்திரப்பட்டி சென்றுவிட்டது. அக்கா சென்ற இரண்டு நாட்கள் கழித்து நானும் சத்திரப்பட்டிக்கு சென்றுவிட்டேன். நானும் எனது அக்காவும் அப்பாவை அம்மா ஆட்கள் வைத்து கொன்றுவிட்டதாக தாத்தா, பாட்டியிடம் சொன்னோம். அதன் பின்னீடு தாத்தாவும் பாட்டியும் எங்களை திருச்சிக்கு அழைத்து சென்றார்கள். அங்கு தனது மகளை கொன்றுவிட்டதாக தாத்தாவும் பாட்டியும் மனு கொடுத்தார்கள். இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரங்களை கூறினேன். அதன் பின்னீடு காரைக்குடிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கும் என்ன நடந்தது என என்னை விசாரித்தார்கள் நான் நடந்த விபரத்தை கூறினேன். பின் ஒரு மாதம் கழித்து திருப்பத்தூர் கோர்ட்டில் நீதிபதியிடம் நடந்த விபரம் குறித்து இரகசிய வாக்குமூலம் கொடுத்தேன். என்னைப் போலவே எனது பாட்டி சிங்கம்மாளும் எனது தங்கை பவித்ராவும் நீதிபதியிடம் ரகசிய வாக்குமூலம் கொடுத்தார்கள். என்னை விசாரித்தவர்களிடம் நான் நடந்த விபரங்களை கூறினேன் என்று முதல் விசாரணையில் கூறியுள்ள விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்ததிலிருந்து 7 வருடங்களாக எனது பாட்டி வீட்டில் (அ.சா.1) இருந்து

வருகிறேன். திருச்சிக்கு எனது பாட்டி மற்றும் தாத்தாவுடன் நான் சென்ற போது நான் சொல்ல சொல்ல எனது வாக்குமூலத்தை போலீஸ் அதிகாரி எழுதிக் கொண்டார். அந்த விபரங்கள் நான் சொல்லியவாறு எழுதப்பட்டுள்ளது என்று நான் படித்துத் தெரிந்துக் கொண்டேன். அதன் பின்னீடு காரைக்குடி ரயில்வே போலீசார் விசாரித்தார்கள். அப்போது திருச்சிக்கு எனது தாத்தா பாட்டியுடன் சென்றபோது அங்கிருந்த போலீஸ் அதிகாரி என்னை விசாரணை செய்தார் என்பதையும் நான் சொல்ல சொல்ல எனது வாக்குமூலத்தை பதிவு செய்துக் கொண்டார்கள் என்ற விபரத்தையும் நான் சொல்லியுள்ளேன். நான் தற்சமயம் கல்லூரி படிப்பு முடித்து வேலை பார்த்து வருகிறேன். நான் எனது பாட்டி வீட்டிற்கு சென்ற போது 9ம் வகுப்பு முடித்திருந்தேன். நான் எனது பாட்டி வீட்டிற்கு சென்றதிலிருந்து எனது படிப்பு செலவை எனது பாட்டி தான் செலவு செய்து வந்தார்கள். 10ம் வகுப்பு மட்டும் அறந்தாங்கியில் சின்ன பாட்டி வீட்டில் தங்கி படித்தேன். நான் நமனசமுத்திரத்திலிருந்து எனது பாட்டி வீட்டிற்கு எனது தகப்பனார் இறந்த 3 மாதங்கள் கழித்து தான் சென்றேன் என்றால் சரிதான். இந்த 3 மாத காலத்தில் எங்கள் வீட்டிற்கு எதிராக இருந்த நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் எந்தவித தகவலும் புகாரும் நான் கொடுக்கவில்லை. 1வது எதிரி கடைக்கு சிலிண்டர் போட வருவார் அவ்வாறு அடிக்கடி சிலிண்டர் போட வரும்போது எனது தாயாருடன் பழக்கம் ஏற்பட்டது. இது என் தகப்பனாருக்கு தெரிந்தவுடன் என் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை ஏற்பட்டது என்று இந்த வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதேபோல 25.02.2015ம் தேதி நான் முதல் விசாரணையில் கூறியவாறு 1வது எதிரி எங்கள் வீட்டிற்கு வரவும் இல்லை என்றும் என்னையோ என் சகோதரிகளையோ மிரட்டவும் இல்லை என்றும் என் தந்தையாரின் முகத்தில் தலையணையை வைத்து அழுத்தவும் இல்லை என்றும் இரும்பு ராடால் என்

அப்பாவின் தலையில் அடிக்கவும் இல்லை என்றும் அதன் பின்னர் என் அம்மாவிற்கு போன் செய்து என் தகப்பனார் இறந்துவிட்டார் என்று சொல்லவும் இல்லை என்றும் மேற்படி விபரங்கள் அனைத்தும் வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி போன் செய்தவுடன் என் அம்மா கதவை திறக்கவும் இல்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் சொல்லியவாறு வீட்டிலிருந்த டேபிளில் வைத்து எனது அப்பா அணிந்திருந்த ரத்தம் படிந்திருந்த ஆடைகளை மாற்றினார்கள் என்ற விபரமும் நான் பொய்யாக வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சகோதரிகளான எங்கள் மூவரையும் மொட்டை மாடியில் வைத்து அடைத்து வைத்திருந்தார்கள் என்று சொல்வதும் தவறு இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வெளியில் யாரிடமும் சொல்லக்கூடாது என்றும் அவ்வாறு சொன்னால் என் அப்பாவை போல் எங்களையும் கொன்றுவிட்டு என் தகப்பனார் இறந்துவிட்ட துக்கத்தில் நாங்கள் இறந்துவிட்டதாக எதிரிகள் எங்களை மிரட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் தகப்பனாரை பெஞ்சில் வைத்து எதிரிகள் மூவரும் தூக்கி சென்றார்கள் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. அரைமணிநேரம் கழித்து எதிரிகள் மூவரும் வந்தார்கள் என்று நான் சாட்சியம் அளித்திருப்பது தவறு என்றால் சரியல்ல. ரத்தம் படிந்திருந்த ஆடைகளை ஒரு சாக்குப் பையில் வைத்து கட்டினார்கள் என்று நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி கொண்டு வந்த வெள்ளைக் கலர் பவுடரும் மற்றும் எலுமிச்சைபழம் கொண்டு தண்ணீரில்கலந்து வீட்டில் ரத்தம் படிந்த இடத்தை கழுவினார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு எதிரிகள் விஷயத்தை வெளியில் சொல்லக்கூடாது என்று மிரட்டினார்கள் என்றும் அதிகாலை 03.00 மணியளவில் 1, 2 எதிரிகள் வெளியில் சென்றுவிட்டார்கள் என்றும்

வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறந்த பின்பும் 1வது எதிரி எங்கள் வீட்டிற்கு எப்போதும் வருவது போல் வந்து போய் கொண்டிருந்தார் என்றும் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சான்று பொருள் 1 முதல் 6க்கும் இந்த வழக்கிற்கும் 1வது எதிரிக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சான்று பொருட்கள் 1 முதல் 6 இந்த வழக்கிற்காக போலீசாரால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. போலீசார் எங்களிடம் சொல்லிக் கொடுத்தும் அதனடிப்படையில் சான்று பொருள் 1 முதல் 6 ஐ நீதிமன்றத்தில் நான் அடையாளம் காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களது தாயாருக்கும் எங்கள் பாட்டியின் குடும்பத்தாருக்கும் இருந்த கருத்து வேறுபாடு காரணமாக எங்கள் தாயாரை மிரட்டி பணிய வைப்பதற்காகவும் பாட்டி குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து ஒரு பொய்யான புகார் கொடுத்துள்ளார்கள் என்றும் அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்க எனது பாட்டி குடும்பத்தார்கள் கேட்டுக் கொண்டார்கள் என்றும் நான் எனது பாட்டி குடும்பத்தாரின் பராமரிப்பில் இருந்து வருவதால் அவர்கள் கேட்டுக்கொண்டதால் முதல் விசாரணையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

எனது அம்மாவுடன் உடன் பிறந்த மூத்த சகோதரி பெயர் விஜயா. எனது அம்மாவையும் விஜயாவையும் தவிர தாத்தா, பாட்டிக்கு வேறு வாரிசுகள் கிடையாது. எனது தாத்தா பாட்டிக்கு நமணசமுத்திரத்தில் அதிக சொத்துக்கள் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் குறித்து எனது பெரியம்மா எனது தாயார் மீது பாகப்பிரிவினை வழக்கு திருமயம் நீதிமன்றத்தில் தொடர்ந்தது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து எனக்கு தெரியாது. எனது

தாயாருக்கு அதிக காலியிடங்கள் இருந்தது என்றால் சரிதான். எங்களுக்கு 4 வீடுகள் வாடகைக்கு விடும் அளவிற்கு இருந்தது. மேற்படி சொத்துக்கள் அனைத்தும் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் 9ம் வகுப்பு வரை ஆங்கில வழியில் கல்வி பயின்றேன். நான் நன்றாக படிப்பேன். நான் பள்ளிக்கு தவறாமல் சென்றுவிடுவேன். பள்ளிக்கு பேருந்தில் செல்வேன். எப்பவாவது அப்பா கொண்டு வந்து விடுவார். எனது சகோதரிகள் எனக்கு முன்பாக சென்றுவிடுவார்கள். நான் தாமதமாக செல்வேன். எனக்கு காலை 09.00 மணிக்கு பள்ளி துவங்கும். நான் ஆசிரியர்களிடமும் சக மாணவிகளுடனும் நன்கு பழகுவேன். அதேபோல் ஆசிரியர்களும் என்னிடம் சகஜமாக என்னிடம் பேசுவார்கள். என் தகப்பனார் இறந்த பின்னீடு நான் பள்ளிக்கு பரிட்சைக்கு மட்டும் தான் சென்றேன். என் தகப்பனார் இறந்த ஒரு மாதத்திற்கு பின்னீடு பரிட்சைக்கு சென்றேன். 1வது எதிரி தான் எங்கள் வீட்டிற்கு கேஸ் சிலிண்டர் போடுவார் என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர் HP கேஸ் கம்பெனியில் வேலை செய்தார். எனது தகப்பனார் இறந்த மறுநாள் காரைக்குடி ரயில்வே போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் என் தகப்பனார் இறந்து கிடந்த ரயில்வே பாதையில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்ற பிறகு தான் போலீசார் அங்கு வந்தார்கள். அப்போது மணி 10.00 இருக்கும். என் தகப்பனாரை சடலக் கூறாய்வு செய்ய திருமயம் மருத்துவமனைக்கு 12.00 மணியளவில் கொண்டு சென்றார்கள். அப்போது என்னுடன் எனது தாயார், எனது சகோதரிகள் மற்றும் உறவினர்கள் இருந்தார்கள். உறவினர்கள் யாரென்று எனக்கு ஞாபகம் இல்லை. மருத்துவமனைக்கு போலீசார் வந்தார்களா என்றால் தெரியவில்லை. எங்கள் தாத்தா, பாட்டிக்கு என்

தகப்பனார் இறந்த தகவலை எனது மாமா மாணிக்கம் அங்கிருந்தவர்கள் போனை வாங்கி தகவல் சொன்னார். அவர் புதுக்கோட்டையில் குடியிருக்கிறார். மாமா மாணிக்கத்திற்கு எனது அம்மாவின் போனை வாங்கி அருகிலிருப்பவர்கள் போன் செய்தார்கள். என் தாத்தா, பாட்டி காலை 09.00 - 10.00 மணிக்கு ரயில்வே பாதைக்கு வந்துவிட்டார்கள். எங்கள் தாத்தா, பாட்டி எங்களிடம் பேசவில்லை. தாத்தா பாட்டியிடம் எங்களை அம்மா பேசவிடவில்லை. எங்கள் பெரியப்பா, பெரியம்மா அங்கு வந்தார்கள். அவர்கள் எங்களிடம் பேசினார்கள். என் அப்பாவின் தாய்மாமா பெயர் மாணிக்கம். என் அப்பா இறந்த பிறகு மாமா மாணிக்கம் என் அம்மாவிடம் சொத்துக்களை பெறுவதற்காக வழக்கிட்ட விபரம் எனக்கு தெரியாது. என் அப்பா இறப்பதற்கு முன்பு என் அப்பாவிடம் போன் இருந்தது. என் அப்பா இறப்பதற்கு முன்பு என் அப்பாவின் போனில் என் தாத்தா, பாட்டி, மாமா ஆகியோர்களிடம் பேசியுள்ளேன். எங்கள் ஊரிலிருந்து சத்திரப்பட்டிக்கு நாங்கள் செல்வதுண்டு. நானும் என் சகோதரிகளும் மட்டும் சத்திரப்பட்டிக்கு செல்வதுண்டு. என் தகப்பனார் இறந்த பிறகு 5 தேர்வுகளை எழுதினேன். என் தகப்பனார் இறந்த இரண்டு மாத காலத்தில் தாத்தா, பாட்டி எங்களை தொடர்பு கொள்ளவில்லை என்றால் சரிதான். 2வது எதிரியை சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதற்கு முன்பு எனக்கு தெரியாது. என் அப்பா இறந்த பின்னீடு காரைக்குடி ரயில்வே போலீசார் என்னையோ என் சகோதரிகளையோ விசாரிக்கவில்லை. காரைக்குடி ரயில்வே போலீசார் சம்பவயிடத்தில் வைத்து விசாரிக்கும் போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை சொல்வதற்கு தோன்றவில்லை என்றால் என் தாயார் மிரட்டியதால் நான் சொல்லவில்லை. என் தாயார் ரயில்வே பாதையில் வைத்து மிரட்டினாரா என்றால் இல்லை. என் தகப்பனார் இறந்த பின்னீடு பள்ளிக்கு பரிட்சை எழுதும் செல்லும் போது என்

நண்பர்களிடத்திலோ ஆசிரியர்களிடமோ முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை சொல்வதற்கு தோன்றவில்லை என்றால் என் தாயார் மிரட்டியதற்கு பயந்து கொண்டு சொல்லவில்லை. என் தகப்பனார் இறந்த மறுநாள் 26.02.2015 அன்று நான் பள்ளிக்கு சென்றேனா என்றால் பள்ளிக்கு கிளம்பினேன் ஆனால் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டதால் செல்லவில்லை. பள்ளிக்கு 07.00 மணிக்கு கிளம்பினேன். 08.30 மணிக்கு பேருந்து வரும். கடைக்கு முன்பாகவே பேருந்து நிறுத்தம் உள்ளது. அன்று என் சகோதரிகள் பள்ளிக்கு சென்றுவிட்டார்கள். பின்பு அவர்கள் காலை 09.00 - 09.30 மணிக்கு அழைத்து வந்துவிட்டார்கள். என் சகோதரிகள் காலை 08.00 மணிக்கு பள்ளிக்கு சென்றுவிட்டார்கள். என் இறப்பதற்கு முன்பு அப்பாவிற்கும் அம்மாவிற்கும் பிரச்சினை ஏற்பட்டு காவல் நிலையம் சென்றுள்ளார்களா என்றால் இல்லை. என் அப்பா இறந்த பிறகு 2, 3 நாட்கள் கடை அடைத்திருந்தது. அந்த நேரத்தில் என் தகப்பனார் இறப்பு குறித்து துக்கம் விசாரிக்க பெரியம்மா, பெரியப்பா, வடக்குப்பட்டி தாத்தா, பாட்டியை தவிர வேறு யாரும் வரவில்லை. என் தந்தை இறந்தது குறித்து முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள விபரங்களை காவல் நிலையத்தில் போய் சொல்ல தோன்றவில்லை என்றால் அம்மாவிற்கு பயந்து கொண்டு செல்லவில்லை. என் அப்பா இறந்தது குறித்து போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் காரைக்குடி போலீசார் 2, 3 தடவை விசாரித்தார்கள். என் அப்பா இறந்து எத்தனை நாள் கழித்து விசாரித்தார்கள் என்றால் தாத்தா, பாட்டி கேஸ் கொடுத்ததற்கு பின்னீடு விசாரித்தார்கள். அதற்கு பின்பு போலீசார் என்னை காவல் நிலையம் அழைக்கவில்லை நான் செல்லவில்லை. எங்கள் வீட்டிற்கு பின்பக்கம் ரயில்வே ட்ராக் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீடு மற்றும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் காலைக் கடன் கழிப்பதற்காக ரயில்வே ட்ராக்கிற்கு செல்வார்கள்

என்றால் சரிதான். என் மூத்த சகோதரியிடம் செல்போன் இருந்தது. அந்த செல்போனை நான் கேட்கமாட்டேன். அந்த செல்போனில் உறவினர்கள் பேசுவார்களா என்றால் பேசமாட்டார்கள். என் சகோதரியின் செல்போன் நம்பர் தெரியாது. என் மூத்த சகோதரி அன்புக்கரசி என் தாத்தா, பாட்டி வீட்டிற்கு 12.05.2015ம் தேதி அவராகவே சென்றுவிட்டார். அதன் பிறகு நான் தானாகவே அக்கா சென்று இரண்டு நாட்கள் கழித்து தாத்தா, பாட்டி வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் தாத்தா, பாட்டி வீட்டிற்கு சென்ற பிறகு கேஸ் கொடுத்ததற்கு பின்னீடு போலீசார் 2, 3 தடவை விசாரித்தார்கள். அதன் பின்னீடு போலீசார் என்னை விசாரணைக்கு அழைக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் 2வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றாலும் இங்கு குறியீடப்பட்டுள்ள சான்று பொருட்களுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றாலும் சரியல்ல. என் தாயார் பெயரில் உள்ள சொத்துக்களை எங்கள் தாத்தா பாட்டி மற்றும் மாமா மாணிக்கம் பெயருக்கு மாற்றித் தர என் அம்மா சம்மதம் தரவில்லை என்பதால் தாத்தா பாட்டியின் பின் யோசனையின் பேரில் புகார் தரப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது மூத்த சகோதரி அன்புக்கரசிக்கு என் தாத்தா பாட்டியின் உறவினரை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். என் மூத்த சகோதரியின் கணவர் சொத்து கேட்டு அடித்து வீட்டை விட்டு விரட்டியதில் என் அக்கா அன்புக்கரசி என் தாயார் வீட்டில் வந்து 6 மாதம் இருந்தார் என்றால் சொத்துக்காக என் அக்கா அன்புக்கரசி என் தாயார் வீட்டிற்கு வரவில்லை. என் தாயார் பெயரில் அளவிற்கு அதிகமான சொத்துக்கள் உள்ளது என்றும் அதை மிரட்டி பறிப்பதற்காக தாத்தா, பாட்டியின் பின் யோசனையில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. என்

தக்பபனார் உண்மையில் ரயில்வே ட்ராக்கில் ரயில் விபத்தில் தான் இறந்தார் என்றால் சரியல்ல. இந்த விபரம் எனக்கு தெரியும் என்றும் ஆனால் நான் என் தாத்தா பாட்டியுடன் சேர்ந்து கொண்டு என் பாட்டி கொடுத்த பொய்யான புகாரிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

எனக்கு விபரம் தெரிந்த காலத்திலிருந்து என் தாத்தா பாட்டி எங்கள் வீட்டிற்கு வந்து செல்வார்கள் என்றால் சரிதான். என் தந்தையின் தந்தை கோவில் பூசாரி ஆவார். அவர் மாதமாதம் வீட்டிற்கு பூஜை செய்ய வருவார் என்றால் இல்லை ஏதேனும் விஷேசம் என்றால் வருவார். எங்கள் வீட்டில் புதையல் இருப்பதாக கூறி என் தந்தையின் தந்தையான சிதம்பரம் ஒரு முறை பூஜை செய்தார். அது சம்பந்தமாக தாத்தா சிதம்பரம் என் அம்மாவிடம் அடிக்கடி பேசுவாரா என்றால் இல்லை. எங்கள் வீட்டிற்கு எதிர்த்தாற்போல் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அங்குள்ள போலீசார் எங்கள் கடையில் தான் டீ சாப்பிடுவார்கள் என்றால் சரிதான். அங்கு டீ சாப்பிட வரும் போலீசாரிடம் நான் பேசியதில்லை. மெயின் ரோட்டில் வாகனப் போக்குவரத்து அதிகமாக இருப்பதால் தேவைக்கு ஏற்ப வீட்டிற்கு பின்புறம் தான் செல்வோம். எனது பெரியம்மாவிற்கும் என் அம்மாவிற்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சினை இருந்ததால் சொத்தை என் தந்தையின் பெயரில் எழுதி வைக்கச் சொல்லி வற்புறுத்தினார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என் அக்கா அன்புக்கரசி தனியாக செல்போன் வைத்துள்ளதால் அவரது தோழிகளிடம் சகஜமாக பேசிக்கொள்வார் என்றால் சரிதான். என் அப்பா அரசியலில் கிடையாது. அதேபோல் கட்சிக் கூட்டத்திற்கு செல்லமாட்டார். என் அப்பா எந்த அரசியல் கட்சியையும் சார்ந்து கிடையாது. எங்கள் வீட்டிலுள்ள தலையணையில் இலவம் பஞ்சு மற்றும் பழைய துணிகளை வைத்து மூட்டப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வேறு

மாதிரியான தலையணை எங்கள் வீட்டில் கிடையாது. நானும் என் சகோதரிகளும் மொட்டை மாடியில் இரவு 12.00 மணிக்கு 15 - 30 நிமிடங்கள் இருந்தோம். எங்கள் வீட்டின் மாடிப்படி வீட்டிற்கு வெளிப்புறமாக அமைந்துள்ளது என்றால் சரிதான். நாங்கள் அங்கிருந்து இறங்கி போக வேண்டுமென்றால் போயிருக்கலாம். என் அம்மா மிரட்டியதால் போகவில்லை. அந்த நேரத்தில் என் அம்மா எங்கள் அருகில் இல்லை. மாடியில் இருந்து பார்க்கும் போது எதிரில் இருந்த காவல் நிலையத்தில் லைட் எரிந்து கொண்டிருந்தது. அங்கு அப்பொழுது காவலர்கள் இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எங்கள் டீ கடை காலை 05.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 10 - 11 மணி வரை கூட்டத்தை பொறுத்து கடை இருக்கும். 25.02.2015 அன்று இரவு 8 - 8.30 மணிக்கு நாங்கள் தூங்கி விட்டோம். கடை அடைத்த நேரம் தெரியாது. பொதுவாக எங்கள் வீட்டில் நான், என் சகோதரிகள், என் அம்மா, அப்பா ஒரே இடத்தில் பாய் விரித்து தூங்குவோம். சில நேரத்தில் அப்பா பழைய வீட்டில் தூங்குவார். பழைய வீடு எங்கள் வீட்டிலிருந்து 25 மீட்டர் தள்ளி உள்ளது. அந்த வீட்டிற்கு கதவு, ஜன்னல், பூட்டு திறப்பு உள்ளது என்றால் சரிதான். 25.02.2015ம் தேதி நான் 08.30 மணிக்கு தூங்கிவிட்டதால் என் தந்தை எங்கு எத்தனை மணிக்கு தூங்கினார் என்று எனக்கு தெரியாது. என் அப்பா உடல் பருமன் சுமார் 70 கிலோ இருப்பார். எனது சகோதரி அன்புக்கரசி என் தாயாரிடமோ என்னிடமோ தகவல் ஏதும் சொல்லாமல் தான் தாத்தா, பாட்டி வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் என்னிடம் சொல்லிவிட்டு தான் சென்றார். இரண்டு நாட்கள் கழித்து நானாகவே தாத்தா, பாட்டி வீட்டிற்கு சென்றுவிட்டேன். என் சகோதரி அன்புக்கரசியை நான் தான் என் தாயாருக்கு தெரியாமல் அனுப்பி வைத்தேன். அது சம்பந்தமாக என் தாயார் காவல் நிலையத்தில் புகார் செய்யவில்லை. கடந்த 2022 ஏப்ரல் மாதம் நான் என் மூத்த சகோதரி, மூத்த

சகோதரியின் கணவர், என் அத்தை, அத்தைகள் கணவர், தாத்தா, பாட்டி, மாணிக்கம் என்பவர் அனைவரும் சேர்ந்து எங்கள் பெயரில் சொத்து எழுதி வைக்க சொல்லி கேட்டார்கள் என்றால் சரிதான். என் அப்பா இறந்த ரயில்வே பாதையில் போலீசார் எங்களை மொத்தமாக வைத்து தான் விசாரித்தார்கள். தனித்தனியாக விசாரிக்கவில்லை. அவ்வாறு போலீசார் எங்களை தனித்தனியாக விசாரித்திருந்தால் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் சொல்லியிருப்பேன் என்றால் சொல்லியிருப்பேன் இருந்தாலும் அம்மாவிற்கு பயந்து கொண்டு சொல்லவில்லை. 26.02.2015 அன்று காலை 05.00 மு கடையை என் தாயார் எப்போதும் போல் திறந்தார். அப்போது நாங்கள் தூங்காமல் வீட்டிலிருந்தோம். சகோதரிகள் மூவர் மட்டும் வீட்டில் தனியாக இருந்தோம். அப்போது நான் 9ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். ஒரு முக்கியமான விஷயத்தை காவல் துறையில் சொன்னால் ரகசியம் காப்பார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் அந்த அளவிற்கு எனக்கு விபரம் தெரியாது. என் மூத்த சகோதரி அன்புக்கரசி திருமணம் ஆகி குழந்தை பிறந்த பிறகு 6 மாத காலமாக என் தாயாருடன் தங்கியிருந்தார் என்றால் சரிதான். என் தாயார் இந்த வழக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்த போது என் தந்தைகயின் தாய்மாமா மாணிக்கம் தான் பெயிலில் எடுப்பதற்கு ஏற்பாடு செய்தார் என்றால் சரிதான். பெயிலில் எனது தாயார் வந்த பின்னீடு எங்களுடன் சேர்ந்து வசிக்கவில்லை. 26.02.2015ம் தேதி நான் பள்ளிக்கு செல்லவில்லை. அன்று நான் பள்ளிக்கு சென்றேன் என்றும் என் அப்பா விபத்தில் இறந்த தகவலை எனது உறவினர் கூறி பள்ளியிலிருந்து என்னை அழைத்து வந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. என் தந்தை குடும்பத்தார் என் தாயாரிடமிருந்து சொத்துக்களை எழுதி கேட்டார்கள் என்றும் என் தாயார் மறுத்துவிட்டதால் என்

தாயாருக்கு எதிராக என்னை சாட்சி சொல்ல சொன்னதில் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அறந்தாங்கியில் படித்துக் கொண்டிருந்தபோது விஷம் அருந்திவிட்டார் என்ற தகவலை என் அப்பத்தா என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள படி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எனது தந்தையார் குடும்பத்தார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம் ஆர்.சத்யதாரா, 08.11.2022
கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

//உண்மை நகல்//